**இலங்கை துறைமுகங்கள் முகாமைத்துவ மற்றும் மதியுரை(தனியார்) கம்பனி – 2016**

---

இலங்கை துறைமுகங்கள் முகாமைத்துவ மற்றும் மதியுரைக் கம்பனியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினையும் உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இக்கணக்காய்வினை மேற்கொள்வதற்காக பகிரங்க தொழில்துறையில் ஈடுபட்டுள்ள பட்டயக் கணக்காளர் கம்பனியொன்று உதவி வழங்கியது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் பிரிவின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கருதும் மீளாய்வாண்டின் கம்பனியின் செயலாற்றல் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். நான் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 கம்பனியின் உருவாக்கம்

--------------------------------------------

இலங்கை துறைமுகங்கள் முகாமைத்துவ மற்றும் மதியுரை (தனியார்) கம்பனி 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட பொறுப்பில் வரையறுக்கப்பட்ட அரச கம்பனியொன்றாக இருந்ததுடன், 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் மீண்டும் கம்பனியொன்றாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இங்கு இலங்கை துறைமுக அதிகாரசபைக்குரிய 40 சதவீதம் மற்றும் இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தின் 15 சதவீத பங்கு உரித்துக் காணப்படுகின்றது.

## 1.5 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

--------------------------------------------------------------------------------------------

2012 ஆம் ஆண்டு முதல் இலங்கை துறைமுக அதிகாரசபையிடமிருந்து கிடைக்க வேண்டியதாக காணப்படும் கட்டிட திருத்தச் செலவினம் ரூபா 5,901,323 மற்றும் ஊழியர் நட்டஈடு ரூபா 1,013,472 என்பவற்றை அறவிடுதல் நிச்சயமற்றதாக அவதானிக்கப்பட்டது.

# 2. நிதிக்கூற்றுக்கள்

----------------------------

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

--------------------------------------------------

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை துறைமுகங்கள் முகாமைத்துவ மற்றும் மதியுரைக் கம்பனியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

---------------------------------------------------------------------------------------------------------------------------------------

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லையும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

நான் அபிப்பிராயப்படுவதாவது:

(ஆ) - கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றன என்பதும்,

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியினது நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்பதும் ஆகும்.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடனான இணக்கமின்மை

---

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன

| | |
|---|---|
| (அ) துறைமுக அதிகாரசபையுடன் 2016 செப்தம்பர் 15 ஆந் திகதி மேற்கொண்ட காலி முகத்திடலின் நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் என்பவற்றிற்காக உடன்படிக்கையின் 9 ஆம் பிரிவு. | உடன்படிக்கை காலத்தில் ஒவ்வொரு ஆண்டின் இறுதியில் அடுத்த ஆண்டில் சனவரி 31 இல் உள்ளவாறு கம்பனியால் துறைமுக அதிகார சபைக்கு ஆண்டின் நிதி செயற்பாடுகள் தொடர்பாக எழுத்துமூல அறிக்கை அதன் கணக்காய்வின் ஊடாக சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக அவ்வறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈ4/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) 4.2.2 ஆம் பிரிவு | பணிப்பாளர் சபையினால் செயலாற்றல் அறிக்கை காலரீதியாக மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 5.1.1 ஆம் பிரிவு | சகல பொது முயற்சிகளினாலும் கூட்டிணைந்த திட்டம் (Coperate Plan) ஒன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், கம்பனியால் அவ்வாறான திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 7.2 ஆம் பிரிவு | சகல பொது முயற்சிகளாலும் பிரதான செயற்பாடுகளை மேவுகை செய்யக்கூடிய வகையில் செயற்திட்ட கைநூலொன்று (Procedure Manual / System) தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் கம்பனி அவ்வாறான செயற்பாட்டுக் கைநூலொன்று தயாரித்திருக்கவில்லை. |
| (iv) 7.4.2 ஆம் பிரிவு | நிறுவனத்தின் நிர்வாகம், செயற்பாடு மற்றும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பாக தீர்மானம் எடுத்தல் மற்றும் அது தொடர்பான பின் தொடர் நடவடிக்கைகளை செயற்படுத்து வதற்காக பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்கு 05 நாட்கள் முன்னர் சிரேஷ்ட முகாமைத்துவ குழு கூட்டப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது மேற்குறித்த கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. |
| (v) 7.4.5 ஆம் பிரிவு | நிறுவனத்திற்குச் சொந்தமான நிலையான சொத்துக்கள் மற்றும் இருப்பு மெய்மையாய்வு செய்வதற்காக வருடாந்த பொருள் மெய்மையாய்வு சபை நியமிக்கப்பட்டு வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் நிறுவனத்திற்கு சொந்தமான ரூபா 6,039,966 கிரயமான நிலையான |

| | | |
|---|---|---|
| | | சொத்துக்களும் ரூபா 384,128 ஆன இருப்புக்களும் மீளாய்வாண்டின் போது மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்க வில்லை. |
| (vi) | 8.8 ஆம் பிரிவு | கம்பனி ஆரம்பத்தின் போது செலவின வரையறைகள் குறிப்பிடப்பட்டு பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடன் நிதி அதிகாரம் கையளிக்கப்பட வேண்டிய போதிலும் கம்பனி மீளாய்வாண்டிற்காக மேற்படி நிதி அதிகார கையளிப்பினை வழங்கியிருக்கவில்லை. |
| (vii) | 7.4.1 மற்றும் 2010 திசெம்பர் 14 ஆந் திகதிய பிடி/55 ம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் (1) ஆம் பிரிவு | கணக்காய்வு குழு குறைந்தது 03 மாதங்களுக்கு ஒரு முறை தனது அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகளை பணிப்பாளர் சபைக்கு வழங்கப்பட வேண்டிய போதிலும் கம்பனி உள்ளக கணக்காய்வு பிரிவொன்றை தாபித்து கணக்காய்வு குழுக் கூட்டங்களை நடாத்தியிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கம்பனியின் நிதி விளைவுகள் ரூபா 12,062,371 இலாபமாக இருந்ததுடன், இதற்கொப்பான முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 3,011,085 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 9,051,286 ஆல் அல்லது 301 சதவீத அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

இலங்கை துறைமுக வளவிற்கு வெளியே அமைந்துள்ள் துறைமுகத்திற்குரிய உரிய கடல் எல்லைக்கு வரும் கப்பல்களை நிறுத்தி வைப்பதற்கு இடவசதிகளை வழங்குதல். கப்பல் பொருட்களை ஏற்றி இறக்குதல் போன்ற துணை சேவைகளை வழங்குதல், உரிய சந்தர்ப்பங்களின் போது துறைமுக போக்குவரத்து நெருக்கடிகளை நிர்வகித்தல் உட்பட பொருள் வெளியேற்றுதல் வேலைகள் கொள்கலன் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் அந்நடவடிக்கைகளுக்காக கட்டணங்களை அறவிடல் மற்றும் அவை தொடர்பான அறிக்கைகளை பேணுவதற்கு உரிய சகல நடவடிக்கைகள் தொடர்பான செயற்பாட்டு மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை பொறுப்பேற்றல் கண்காணித்தல் மற்றும் நிர்வாகம் என்பன இலங்கை துறைமுக முகாமைத்துவ மதியுரை கம்பனியின் பிரதான நோக்கங்களாகும்.

### 4.2 பதவியணியினர் நிர்வாகம்

2003 யூன் 12 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1 பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு பொது முயற்சியினாலும் சகல பதவிகளுக்கான முறையான ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று (Schemes of Recruitment) தயாரித்து அதற்குரிய வரிசை அமைச்சின் அங்கீகாரம் மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் இணக்கப்பாட்டை பெற்றுக் கொண்டு அதற்கு இணங்கும் வகையில் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான ஆட்சேர்ப்பு

நடைமுறையொன்றை பின்பற்றாமல் கம்பனிக்கு 12 உத்தியோகத்தர்களுடன் கூடிய பதவியணியொன்று ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---

### 5.1 செயல் நடவடிக்கைத் திட்டம்

2003 யூன் 12 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 பிரிவின் பிரகாரம் திட்டமிடப்பட்ட காலப்பகுதியில் கம்பனியின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்வது தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள் விளங்கக்கூடிய வகையில் செயல் நடவடிக்கை திடமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

நிதிப் பிரமாணம் 133 மற்றும் 134 ஏற்பாடுகளின் பிரகாரம் கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் உள்ளகச் சோதனை முறையானதெனவும் போதியளவில் உள்ளக கணக்காய்வுப் பிரிவொன்று ஏற்படுத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது உள்ளகக் கணக்காய்வு பிரிவு தாபிக்கப்பட்டு உள்ளகக் கணக்காய்வினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு ஒன்று தயாரிக்கப்பட்டு பாதீடு முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாகப் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான பாதீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.